**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தொழிலாளர் துறை – திரு.மா.கந்தபிரசாத் என்பவருக்கு கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (இ2)த் துறை**

அரசாணை (3டி) எண். 21

நாள் 19.12.2020

சார்வரி வருடம், மார்கழி 4

திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. திரு.மாரிமுத்து என்பவரின் விண்ணப்பம் நாள் 16.06.2017.
2. திரு.மா.கந்தபிரசாத் என்பவரின் விண்ணப்பம் நாள் 16.06.2017.
3. தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணை எண்.ஜி3/26121/2017, நாள் 10.07.2018.
4. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
5. தொழிலாளர் ஆணையரின் கடித எண். ஜி3/26121/2017, நாள் 15.10.2020.

------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கோவை தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து பணியில் இருக்கும்போது 15.09.2016 அன்று மரணமடைந்த திருமதி ச.கி.ஜெகதாம்பாள் என்பவரின் வாரிசுதாரரும் அவரது கணவருமான திரு.ப.மாரிமுத்து என்பவர் தனது மகன் திரு.மா.கந்தபிரசாத் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசுப்பணி வழங்குமாறு விண்ணப்பித்திருந்தார். மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் திரு.மா.கந்தபிரசாத் என்பவரும் கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்குமாறு கோரியிருந்தார்.

2. திரு.மா.கந்தபிரசாத் என்பவரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழிலாளர் ஆணையரின் செயலாணையின் மூலம் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு 27.07.2018 அன்று முற்பகல் முதல் தனியர் அப்பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். இப்பணியிடத்திற்கு தேவையான வயது மற்றும் கல்வித் தகுதிகளை தனியர் பெற்றுள்ளார்.

3. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.மா.கந்தபிரசாத் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 27.07.2018 அன்று முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தொழிலாளர் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

......2

4. தொழிலாளர் ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, காலஞ்சென்ற திருமதி.ச.கி.ஜெகதாம்பாள் என்பவரின் மகன் திரு.மா.கந்தபிரசாத் என்பவருக்கு தொழிலாளர் துறையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 27.07.2018 முற்பகல் அப்பணியிடத்திற்குரிய உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றை நடைமுறையில் உள்ள விதிகளின்படி பெறத் தகுதியுடையவர் ஆவார்.

5. இவ்வாணை இத்துறையின் 'க்யூ' பிரிவு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறையின் அ.சா.எண்.34389/ஜி1/2020, நாள் 17.12.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
திரு.மா.கந்தபிரசாத் இளநிலை உதவியாளர்
(தொழிலாளர் ஆணையர், சென்னை –6 அவர்கள் வழியாக)
தொழிலாளர் ஆணையர், சென்னை–6.

நகல்:
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ/அநமு.2) துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
சுத்த நகல் கோப்பிற்கு (16392/இ2/2020)
இருப்புக் கோப்பு / உதிரிநகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

21.12.20